அரசாங்க பணம் எவ்வளவு வசூலாகிறதோ, அந்த அளவுக்கு அந்த கிராம அதிகாரிக்கு சொத்துக்கள் இருக்கவேண்டும். அவர் கணக்குப் பார்க்கத் தெரிந்து இருக்கவேண்டும். அவற்றைப் பரிசீலிக்க வேண்டும். ஆகவே, மற்ற இலாக்காவைப் போன்று இந்த இலாக்காவில் இந்தப் பணிக்கு கம்யூனல் ரொடேஷன் போட முடியாது.

Cardamom Estates.

* 320 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether all the Cardamom Estates have been registered with the Cardamom Board in this State;

(*b*) the steps taken in this regard to get the registration;

(*c*) the details of the classification; and

(*d*) the incentives offered for their development?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மாவட்டத்திலுள்ள 817 ஏலத் தோட்டங்களில் 326 தோட்டங்கள் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளன.

(இ) கூடிய சீக்கிரம் பதிவு செய்யும் நோக்கத்துடன், ஏலம் நடத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் பதிவு செய்யும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(உ) (1) உடைமையாளர் தோட்டம்

(2) ஒத்திதார் தோட்டம்

(3) குத்தகைதார் தோட்டம்

(4) இதர நபர்கள் வசமிருக்கும் தோட்டம்

(எ) ஏலம் வாரியம் ஐந்து அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவர உத்தேசித்துள்ளது, அவையாவன:—

(1) ஏலச்செடியில் காணும் "காட்டே" என்னும் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம்.

(2) ஏலத்திற்கு அரசாங்கத்துறை நாற்றங்கால் ஆரம்பிப்பதற்கான திட்டம்.

(3) சிறிய அளவில் ஏலச்செடி வளர்ப்பவர்களுக்கு நிதி உதவி கொடுக்கும் திட்டம்.

(4) தவணை முறையில் வாங்கும் நிபந்தனையின்கீழ் தூவும் பாசன தளவாடங்களை வழங்குவதற்கான திட்டம்.

(5) ஏலத்தொழிலின் மறுவாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு ஆராய்ச்சித்துறை அமைப்பதற்கான திட்டம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு பூராவிலும் இருக்கக்கூடிய ஏலத்தோட்டங்கள் எத்தனை? அவற்றில் 326 தான் பதிவாகியிருப்பதாக சொன்னார்கள். இன்னும் எத்தனை பதிவு செய்யப் படவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 817 என்றும், அதில் 326 பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். பதிவு செய்ய தனி அலுவலர் வேண்டும் என்று கேட்டார்கள். அதைப் போரிடே ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி, இப்பொழுது அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புதிய அலுவலர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் ஏலக்காய் எந்த, எந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் எத்தனை என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

* 321 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the time-limit for the registration of owners under the Cardamom plants, has been extended from time to time; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1971 டிசம்பர் 31-ம் தேதி வரை கால வரையறை நீட்டப் பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், உலகச் சந்தையில் ஏலத்தின் விலை சரிந்துவிட்டதாகச் சொல்லப் படுகிறதே. அதைக் குறித்து அந்தத் தொழிலுக்கு புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.